सत्यमेव जयते

புதுச்சேரி அரசு



மாண்புமிகு துணைநிலை ஆளுநர்

டாக்டர் **தமிழிசை சௌந்தரராஜன்** அவர்கள்

# புதுச்சேரி சட்டப்பேரவையில் ஆற்றிய உரை

**26 ஆகஸ்ட், 2021**

மாண்புமிகு துணைநிலை ஆளுநர்

டாக்டர் **தமிழிசை சௌந்தரராஜன்** அவர்கள்

**புதுச்சேரி சட்டப்பேரவையில்**

**ஆற்றிய உரை**

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு. **-குறள்**

வறியவர்க்கு ஈதல் வேண்டும் அதனால் புகழ் உண்டாக வாழ வேண்டும், அப்புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றும் இல்லை.

***மாண்புகெழுமிய சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே ! மற்றும் இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களே !***

வணக்கம் !

**ச**மீபத்தில் நடந்து முடிந்த சட்டப்பேரவை தேர்தல்கள் மூலம் இந்த மேன்மைமிகு அவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்களையும் நான் முதலில் வாழ்த்த விரும்புகிறேன். 15-வது சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தொடரில் தொடக்க உரையாற்றுவது எனக்கு மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது. புதுச்சேரி ஆட்சிப்பரப்பு மக்களின் வளர்ச்சிக்குக் குறிப்பாக புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் சமூக-பொருளாதார மேம்பாட்டுக்கு ஒவ்வொருவரும் கடினமாகப் பாடுபடுவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

**2.** புதுச்சேரி சட்டப்பேரவைக்கானப் பொதுத் தேர்தல் 2021, சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் நடத்தப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடன் பகிர்ந்துகொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். தேர்தல் பணியில் ஈடுபட்ட அனைத்து அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வாறே, தேர்தலை அமைதியான முறையில் நடத்திட அரசு இயந்திரத்திற்கு ஒத்துழைப்பு அளித்த புதுச்சேரி மக்களும் மற்றும் பல்வேறு அரசியல் கட்சியினரும் எனது பாராட்டுதல்களுக்கு உரியவர்கள் ஆவர்.

**3.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் மக்கள் மாண்புமிகு முதலமைச்சர் திரு. ந. ரங்கசாமி அவர்களின் தலைமையில் அமைந்த தேசிய ஜனநாயகக் கூட்டணியின் மீது மீண்டும் நம்பிக்கை வைத்துத் தேர்ந்தெடுத்ததன் மூலம், இதற்கு முன்னர் அவரது தலைமையின்கீழ் இயங்கிய அரசு செயல்படுத்திய மக்கள் நலக்கொள்கைகளும், திட்டங்களும் மக்களைச் சென்றடைந்துள்ளன என்பது நிரூபணமாகியுள்ளது. இந்தப் புதிய அரசு இவ்வாட்சிப்பரப்பின் வளர்ச்சி, வளம் மற்றும் மாநிலத்தின் அமைதி ஆகியவற்றில் சிறந்து விளங்கப் பாடுபடும் என்று உளமார நம்புகிறேன்.

**4.** இந்தியாவில், இந்த ஆண்டு ஏப்ரல் முதல் சூன் வரையிலான காலகட்டங்களில் கொரோனா வைரஸின் (கோவிட்-19) பரவல் காரணமாக, குறிப்பாக இரண்டாம்

அலையின்போது பெரும் அளவிலான உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்தப் பெருந்தொற்றின் தாக்கம் இவ்வாட்சிப்பரப்பிலும் எதிரொலித்தது. எனினும், அரசு துரிதமாகச் செயல்பட்டு இதன் பரவலைக் கட்டுப்படுத்தியது. கொரோனா வைரஸால் பாதித்தவர்களின் எண்ணிக்கை தற்போது வெகுவாகக் குறைந்துள்ளது என்பது மகிழ்ச்சியளிக்கிறது. **"அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின்நோய் தன்நோய் போல் போற்றாக்கடை"** என்ற திருக்குறளுக்கு ஏற்ப பிறன் நோயை தன் நோய்பால் பாவித்து செயலாற்றிய மருத்துவ அதிகாரிகள், செவிலியர்கள், மற்ற சுகாதார ஊழியர்கள், காவல் துறையினர், வருவாய்த்துறை ஊழியர்கள், நகராட்சி ஊழியர்கள் மற்றும் அனைத்து முன்களப் பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கோவிட்-19 பரவலிலிருந்து இவ்வாட்சிப்பரப்பு மக்களை பாதுகாப்பதற்காக மாவட்ட நிர்வாகத்தினால் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடமாட்டங்களுக்கான தடைகளும், உடனடி நடவடிக்கைகளும் பாராட்டத்தக்கவையாகும். சமூக இடைவெளி, முகக்கவசம் அணிதல், அடிக்கடிக் கைகளைக் கழுவுதல் ஆகிய பாதுகாப்பு அம்சங்களை அனைத்து குடிமக்களும் கட்டாயமாக பின்பற்றுவதுடன் இவ்வாட்சிப்பரப்பின் அனைத்து குடிமக்களின் நலனை உறுதிபடுத்தும் விதமாக உடனடியாக தடுப்பூசியை செலுத்திக்கொள்ள வேண்டும் என்றும் இந்தத் தருணத்தில் நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

**5.** நிதிநிலைமையைப் பொருத்தவரையில், 2020-21ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட வருவாய் இலக்கான ₹ 9,000 கோடியில், ₹ 8,419 கோடி வருவாய் கிடைத்துள்ளது. இது வருவாய் இலக்கில் சுமார் 94 விழுக்காடு ஆகும். 2020-21ஆம் நிதி ஆண்டுக்கான மொத்த ஒதுக்கீடான ₹ 9,000 கோடியில் அரசு ₹ 8,342 கோடி செலவு செய்துள்ளது. இது மொத்த ஒதுக்கீட்டில் 93 விழுக்காடாகும். கோவிட்-19 தொற்று பரவல் சூழ்நிலையிலும் கணிசமான வருவாய் கிடைத்தது குறிப்பிடத்தக்கதாகும்.

**6.** இவ்வாட்சிப்பரப்பின் நிதி ஆதாரங்கள் ஒரு குறிப்பிட்ட அளவே உள்ளன. குறிப்பாக சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை (GST) அறிமுகப்படுத்திய பிறகு இவை ஒரு சவாலாகவே உள்ளன. மேலும், தவிர்க்க முடியாத செலவினங்களை கிடைக்கும் வருவாய்க்குத் தகுந்தவாறு சீர்செய்துகொள்ள வேண்டிய நிலையில் அரசு உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இவ்வாட்சிப்பரப்பு மக்களின் விருப்பங்களை நிச்சயம் கருத்தில் கொண்டு சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களையும் திருப்திபடுத்தும் வகையில் **"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை ஆராய்வான் செய்க வினை"** என்ற திருக்குறளுக்கு ஏற்ப பொருள் வருவாயைப் பெருக்கி, அவற்றிற்கு நேரும் இடையூறுகளை ஆராய்ந்து நீக்கி ஒரு சிறந்த நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமர்பிப்பார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

**7.** இந்த சிறு அறிமுக உரையுடன், 2020-21ஆம் நிதியாண்டில் பல்வேறு துறைகளில் அரசு மேற்கொண்ட சில முக்கிய திட்டங்கள் மற்றும் சாதனைகளைப் பற்றி கூற விழைகிறேன்.

**வேளாண் மற்றும் விவசாயிகள் நலம்**

**8.** **“சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை”** என்ற திருக்குறளுக்கு ஏற்ப கிராமப்புற பொருளாதாரத்தின் முதுகெலும்பாக தொடர்ந்து வேளாண் தொழில் திகழ்கிறது. வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதற்காக மானிய விலையில் வேளாண் இடுபொருட்களை வழங்குதல், விவசாயிகளுக்குப் பயிற்சிகள் மற்றும் களப்பார்வை வாயிலாக வேளாண் தொழில்நுட்ப அறிவை அளித்தல் போன்ற பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விவசாயத் தொழிலாளர்கள் பற்றாக்குறையை இயந்திரமயமாக்குதல் மூலம் தீர்க்கவும், உயர்தொழில்நுட்ப இடுபொருட்களை மானிய விலையில் வழங்கிடவும், விவசாய மற்றும் தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பளவை நிலைநிறுத்துதல் போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டும் அதற்கேற்றவாறு உரிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**9.** **“செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து இல்லாளின் ஊடி விடும்”** - அதாவது நிலத்திற்கு உரியவன் சென்று நிலத்தை பார்க்காதிருந்தால் நிலம் ஊடல் கொள்ளும் மனைவியைப்

போல் பிணங்கிவிடும் என்ற சூழல் ஏற்படாதவண்ணம் நிலத்தை உழுபவர்களுக்கு உறுதுணையாக, பயிர் உற்பத்தித் திட்டத்தின்கீழ் நெல், கரும்பு, பருத்தி, மணிலா, பயறு வகைகள், எள் மற்றும் சிறுதானியங்களை உற்பத்தி செய்த 15,129 விவசாயிகளுக்கு உற்பத்தி மானியமாக ₹ 15.73 கோடி வழங்கப்பட்டுள்ளது. நகரம் மற்றும் கிராமப் பகுதிகளில் காய்கறித் தோட்டங்களை ஊக்கப்படுத்தும் விதமாக ₹ 250 மதிப்பிலான காய்கறி விதைப் பைகள் ஒவ்வொரு ஆண்டும் இலவசமாக ஆடிப்பட்டம் பருவத்தில் வழங்கப்படுகின்றன. நகரம் மற்றும் கிராமப்புறங்களில் மாடித் தோட்டங்கள் அமைப்பதை ஊக்கப்படுத்தும் பொருட்டு ஊக்கத்தொகையாக ₹ 3,000-ம் மதிப்புள்ள காய்கறி விதைகள் மற்றும் சிறு தோட்டக்கலை உபகரணங்கள் அடங்கிய தோட்டக்கலை பைகள் 75 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படுகின்றன. காரைக்கால் பகுதியில் காய்கறி விதை சிறு பைகள் ₹ 7.61 இலட்சம் செலவில் 710 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. நகர்ப்புற மாடித்தோட்ட பைகள் ₹ 11.13 இலட்சம் செலவில் 385 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**10.** தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் 3,609 விவசாயிகள் பயனடையும் வகையில் ₹ 3.22 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தோட்டக்கலை பயிர்களுக்கான அறுவடைக்குப் பிந்தைய மானியமாக புதுச்சேரி பகுதியில் உள்ள 1,048 விவசாயிகளுக்கு

₹ 47.92 இலட்சமும் மற்றும் காரைக்கால் பகுதியில் உள்ள 145 விவசாயிகளுக்கு ₹ 3.85 இலட்சமும் வழங்கப்பட்டது. தோட்டக்கலை பயிர்களுக்கான இடுபொருட்கள் மானிய விலையில் 14,840 விவசாயிகளுக்கு ₹ 1.56 கோடி செலவில் வழங்கப்பட்டன. வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தின்கீழ், 11 டிராக்டர்கள், 9 பவர் டில்லர்கள், 17 நெல் நடவு இயந்திரங்கள், 2 பாரம்பரிய வேளாண் உபகரணங்கள், மேம்படுத்தப்பட்ட வேளாண் இயந்திரம் ஒன்று மற்றும் 2 களையெடுப்பான்கள் புதுச்சேரி பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டன. அதேபோல், காரைக்கால் பகுதியில் 61 விவசாயிகள் பயனடையும் வகையில் மொத்தம் ₹ 1.87 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

**11.** **"விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே பசும்புல் தலைகாண்பு அரிது"** – அதாவது மேகத்திலிருந்து மழைத்துளி விழாவிட்டால் பசும்புல்லின் நுனியைக்கூட காணமுடியாது. அப்படிப்பட்ட நிலை வராமல் நீர் இருப்பை மேம்படுத்த ஒருங்கிணைந்த நிலத்தடிநீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், புதுச்சேரி பகுதியில் 134 குழாய்க் கிணறுகள், 109 பம்ப் செட்டுகள் மற்றும் உபகரணங்கள், நிலத்தடிநீர் குழாய்கள் மற்றும் 22 நீர்ப்பாசனத் தெளிப்பு கருவிகள் அமைத்திட ₹ 2.31 கோடி வழங்கப்பட்டுள்ளது. பாரதப் பிரதமரின் விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின்கீழ், விவசாய நிலம் உள்ள ஒவ்வொரு விவசாயக்

குடும்பத்திற்கும் நிதி உதவியாக ஆண்டிற்கு ₹ 6,000 மூன்று தவணைகளாக தலா ₹ 2,000 வீதம் 2018-19ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. இதுவரையில், 10,696 விவசாயிகள் இதனால் பயனடைந்துள்ளனர். இதற்காக விவசாயிகளின் வங்கி கணக்குகளில் நேரடிப் பணப்பயன் வழங்குதல் (DBT) மூலமாக ₹ 8.79 கோடி செலுத்தப்பட்டுள்ளது.

**12.** பாரத பிரதமரின் பயிர்க் காப்பீட்டு திட்டத்தில், மாநில அரசு செலுத்திடும் சந்தாத் தொகையுடன் விவசாயிகள் செலுத்தவேண்டிய சந்தாத் தொகையையும் சேர்த்து புதுச்சேரி அரசே செலுத்தி கூடுதல் ஆதரவுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2019-20ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் புதுச்சேரி பகுதியில் 3,127 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்த 4,149 விவசாயிகளும், காரைக்கால் பகுதியில் 3,810 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்த 4,305 விவசாயிகளும் பதிவு செய்துள்ளனர். சம்பா பருவத்தில் மகசூல் இழப்பினால் பாதிக்கப்பட்ட 8,454 விவசாயிகளுக்கு ₹ 6.55 கோடி காப்பீட்டுத் தொகை வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பயிர் உற்பத்தித் திட்டத்தின்கீழ், இவ்வாட்சிப்பரப்பின் விவசாயிகள் பாசன வசதி செய்வதற்காக உபயோகப்படுத்தும் மின் மோட்டாருக்கான இலவச மின்சாரத்திற்கு மானியமாக ₹ 3.53 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**13.** விவசாயப் பொருட்களை குறைந்த விலைக்கு விவசாயிகள் விற்பனை செய்வதால் ஏற்படும் இழப்பைச் சரிசெய்யும் விதமாக அரசு சந்தைத் தலையீட்டின் மூலம் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதி விவசாயிகளிடமிருந்து மத்திய அரசு நிர்ணயித்த குறுவைப் பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலைக்கு இந்திய உணவுக் கழகம் மூலம் நெல்லை நேரடியாக கொள்முதல் செய்திட நடவடிக்கை எடுத்துள்ளது. புதுச்சேரி பகுதியில் தட்டாஞ்சாவடி, மதகடிப்பட்டு, கன்னியக்கோயில் மற்றும் கரையாம்புத்தூரில் நான்கு கொள்முதல் நிலையங்களும், காரைக்கால் தென்னங்குடியில் நவீன அரிசி ஆலை இயங்கும் இடத்திலும் உள்ளன. விவசாயிகள் கடன் பெறும் வகையில் சுமார் 14,207 கிசான் கடன் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 2020-21ஆம் ஆண்டில் தேசிய மின்னணு வேளாண் சந்தை (e-NAM) திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்தியதற்காக புதுச்சேரி விற்பனைக்குழுவிற்கு "ஸ்கோச் வெள்ளி விருது" மத்திய அரசின் வேளாண் அமைச்சகத்தால் வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களிடம் பகிர்ந்துகொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

## கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலம்

**14.** **"ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு இரவின் இளிவந்தது இல்"** – என்ற திருக்குறளுக்கு ஏற்ப பசுவிற்கு நீர் தாருங்கள் என்று பிறரிடம் இரவாத நிலையே சிறந்தது என்ற

வகையில் கால்நடை பராமரிப்பு பெரும்பான்மையான விவசாயிகளுக்கு வேலைவாய்ப்பினை வழங்கி அதன்மூலம் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, கால்நடை பராமரிப்புத் துறை கால்நடைகள், கோழிகள் போன்றவற்றை பாதுகாக்கும் விதமாக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. 3,70,968 கால்நடைகள், கோழிகள் மற்றும் செல்லப் பிராணிகளுக்கு இலவச சிகிச்சை அளித்ததைத் தவிர, 1,87,195 கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. இவ்வாட்சிப்பரப்பு முழுவதும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் கால்நடை சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டன. எதிர்காலத்தில் நம் விருப்பத்திற்கேற்ப உயர்ரக கலப்பினக் கால்நடைக் கன்றுகளை உற்பத்தி செய்ய 60,008 செயற்கைமுறை கருவூட்டல்கள் செய்யப்பட்டு, இதன் மூலம் 18,738 உயர்ரக மரபு கூற்றைக் கொண்ட கலப்பினக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**15.** தேசிய பால்பண்ணை மேம்பாட்டு வாரியத்தால் (NDDB) உருவாக்கப்பட்ட மென்பொருள் வாயிலாக கால்நடை உற்பத்தித் திறன் மற்றும் கால்நடை நலத்தை தகவல் வலைப்பின்னல் (INAPH) மூலம் கண்காணிப்பதற்காக புதுச்சேரி கறவைப் பசுக்கள் உள்ளிட்ட அனைத்து இனப்பெருக்க கால்நடைகளுக்கும் 12 இலக்க சிறப்பு அடையாள எண் (UID) கொண்ட காது வில்லைப் பொருத்தும் பணி செயல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரையில், 62,539 கால்நடைகளுக்குக்

காது வில்லைகள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், 59,720 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இவ்வாட்சிப்பரப்பில், புறக்கடைக் கோழி வளர்ப்பினை ஊக்கப்படுத்தும் விதமாக 3,700 இருவித பயன்பாடு கொண்ட கிரிராஜா இனக் கோழிகள் அரசு கோழிப்பண்ணைகளில் வளர்க்கப்பட்டு, விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானிய விலையில் வழங்கப்பட்டன.

**16.** ராஜீவ் காந்தி அரசு கால்நடை மருத்துவக் கல்லூரிக்குக் கால்நடை மருத்துவக் கல்விக்காக சென்ற ஆண்டு ₹ 17.28 கோடி உதவிக் கொடை வழங்கப்பட்டுள்ளது. சிறப்பு கால்நடை இனவிருத்தித் திட்டத்தின்கீழ், கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் உறுப்பினர் அல்லாத விவசாயிகளுக்கு கன்று மற்றும் மாட்டுத் தீவனம் 75 விழுக்காடு மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. ₹ 1.79 கோடி செலவில் 4,221 கறவைப் பசுக்களுக்கு மாட்டுத் தீவனமும், மற்றும் ₹ 51.80 இலட்சம் செலவில் 1,369 கிடேரிக் கன்றுகளுக்கு கன்றுத் தீவனமும் வழங்கப்பட்டுள்ளன.

## கலை மற்றும் பண்பாடு

**17.** வயதான 219 நலிந்த கலைஞர்கள், 6 தமிழ் அறிஞர்கள் மற்றும் கலைமாமணி விருது பெற்ற 72 நபர்களுக்கு நிதி உதவியாக ₹ 84.91 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு டிசம்பர் மாதத்தில் 5 நாட்கள் இணையதளம் மூலம் நடத்தப்பட்ட நாடகத் திருவிழாவில் 27 நாடகக் குழுக்கள் பங்கேற்றன.

## குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள்

**18.** **“அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள்வைப் புழி”** – அதாவது வறியவரின் கொடும்பசியைத் தீர்ப்பதே கடமை என தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013-ன்கீழ், நேரடிப் பணப் பயன் வழங்கும் திட்டத்தையும் (DBT) மற்றும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவியினை நேரடிப் பணப் பயன் மூலமாகவும் இவ்வாட்சிப்பரப்பின் அனைத்து வட்டாரப் பகுதிகளிலும் அரசு செயல்படுத்தி வருகிறது. கடந்த நிதி ஆண்டில் அந்தியோதயா அன்ன யோஜனா திட்டத்தின்கீழ், மத்திய அரசால் மாதந்தோறும் ₹ 11.40 கோடி வழங்கப்பட்டு சுமார் 6.18 இலட்சம் பயனாளிகள் பயனடைந்துள்ளனர். புதுச்சேரி அரசு செயல்படுத்திவரும் இலவச அரிசித் திட்டத்தின்கீழ், கடந்த நிதி ஆண்டில் ₹ 235 கோடி செலவு செய்யப்பட்டு சுமார் 3.44 இலட்சம் குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்கள் பயனடைந்துள்ளனர். பாரத பிரதமரின் “கரிப் கல்யாண் அன்ன யோஜனா” திட்டத்தின்கீழ் கோவிட்-19 நிவாரணமாக மத்திய அரசால் வழங்கப்பட்ட உணவு தானியங்கள் தகுதியுடைய சுமார் 1.78 இலட்சம் குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டன. குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டை தொடர்பான சேவைகளை இணையவழி மூலம் வழங்குவது மற்றும் “ஒரே தேசம் ஒரே குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டை” திட்டம் ஆகியவை வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளன.

**கூட்டுறவு**

**19.** கிராமப்புற பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவு இயக்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. நிதி நெருக்கடிகள் இருந்தபோதிலும், புதுச்சேரி அரசு கூட்டுறவுகளுக்கு தொடர்ந்து நிதி உதவிகளை வழங்கி வருகின்றது. தரமான பால் உற்பத்தித் திட்டத்தின்கீழ் புதுச்சேரி பகுதியில் உள்ள தொடக்கக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களில் ₹ 1.85 கோடி செலவில், 15 அதிக கொள்ளளவு கொண்ட குளிர்கலன்கள் மற்றும் 15 தானியங்கி பால் சேகரிப்புப் பிரிவுகளை பாண்லே நிறுவியுள்ளது. தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட நிதி உதவி மூலம் ₹ 85 இலட்சம் மதிப்பிலான அதிநவீன பால் ஆய்வுக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.

**20.** தேசிய விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ₹ 50 இலட்சம் மதிப்பிலான குளிர்பதனக் கட்டமைப்புடன் கூடிய இரண்டு வாகனங்கள் பால் மற்றும் பால் பொருட்களை ஏற்றிச் செல்வதற்காக வாங்கப்பட்டுள்ளன. காரைக்கால் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் குளிரூட்டும் வசதிகள் மற்றும் பால் பதனிடும் பிரிவு ₹ 45 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. தொடக்கக் கூட்டுறவு வீட்டுவசதி சங்க உறுப்பினர்கள் பெற்ற வீட்டு வசதிக் கடனுக்கான நிலுவைத் தொகைக்கு அபராத வட்டியைத் தள்ளுபடி செய்யும் திட்டத்தினை செயல்படுத்தியதன் மூலம்

555 சங்க உறுப்பினர்களிடமிருந்து ₹ 15.97 கோடி வீட்டுவசதிக் கடன் நிலுவைத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும், அபராத வட்டி தொகை தள்ளுபடி செய்யப்பட்டு அவர்களுடைய கடன் சுமையும் குறைக்கப்பட்டுள்ளது.

**மின்விசை**

**21.** இவ்வாட்சிப்பரப்பில் தேவையான அளவுக்கு மின்சாரம் இருப்பதால் தொடர்ந்து தடையின்றி (24 X 7) மின்சாரம் வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்த அரசு மின்பகிர்மான கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. இதற்காக ₹ 58.27 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. 200 KVA திறன்கொண்ட 16 பகிர்மான மின்மாற்றிகள் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 872 மீட்டர் உயர்மின் அழுத்த புதை மின்வடங்கள் மரப்பாலம் துணை மின்நிலையத்திலிருந்து அமைக்கப்பட்டுள்ளன.

**22.** ஒருங்கிணைந்த மின்மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 517 மீட்டர் நீளத்திற்கு 22 KV புதை மின்வட மின்னூட்டிகளும், 315 KVA திறன்கொண்ட ஏழு பகிர்மான மின்மாற்றிகளும், மற்றும் 63 KVA திறன்கொண்ட ஒரு பகிர்மான மின்மாற்றியும் நிறுவப்பட்டுள்ளன. மேலும், 3.8 கிலோமீட்டர் நீளத்திற்கு 11 KV புதை மின்வடங்களும், 2,800 ஒருமுனை மின் அளவிகளும்

(Single Phase Energy Meters) மற்றும் 841 மும்முனை மின்அளவிகளும் (Three Phase Energy Meters) புதுச்சேரி பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. "தீன தயாள் உபத்தியாயா கிராம ஜோதி யோஜனா" திட்டத்தின்கீழ், 6 பகிர்மான மின்மாற்றிகள் புதுச்சேரியின் கிராமப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. 8,858 ஒருமுனை மின்அளவிகளும், மற்றும் 1,773 மும்முனை மின்அளவிகளும் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், 887 பகிர்மான மின்மாற்றிகளுக்கான மின் அளவிகள் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ளன.

**23**. இந்திய சூரிய ஒளி ஆற்றல் நிறுவனத்திடமிருந்து 140.64 மெகாவாட் காற்றாலை மின்சாரத்தை வாங்குவதற்கான மின்விற்பனை ஒப்பந்தம் 24-05-2020 அன்று கையெழுத்தாகியுள்ளது. மேலும், ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள நோக் என்ற இடத்தில் அமையவுள்ள தேசிய அனல்மின் நிறுவனத்தின் (NTPC) புதிய சூரிய மின்சார ஆலையிலிருந்து 100 மெகாவாட் சூரிய மின்சாரம் பெறுவதற்கான மின் விற்பனை ஒப்பந்தம் தேசிய அனல்மின் நிறுவனத்திடம் 05-01-2021 அன்று கையெழுத்தாகியுள்ளது. 12.98 MWp திறனுள்ள சூரிய மின்சக்தி பேனல்கள் கட்டடங்களின் மேல்தளங்களில் அமைக்கப்பட்டு புதுச்சேரியிலுள்ள பகிர்மான மின்கட்டமைப்புடன் இணைக்கப் பட்டுள்ளன. மேலும், காரைக்கால் பகுதியில் தனியார் நிறுவனத்தின்

மூலம் 10 MW திறனுள்ள சூரிய மின்சக்தி பேனல்கள் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டு மின் கட்டமைப்புடன் 24-03-2021 அன்று வெற்றிகரமாக இணைக்கப்பட்டுள்ளன. 8,927 வீடுகளுக்கும், 1,389 வர்த்தக நிறுவனங்களுக்கும், 34 வேளாண் பம்பு செட்டுகளுக்கும் மற்றும் 231 தெரு விளக்குகளுக்கும் புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. புதிய மின்இணைப்பைப் பெறுவதற்கான விண்ணப்பங்களை இணையதளம் வாயிலாக பொதுமக்கள் விண்ணப்பித்து பயன்பெறும் வகையில், இத்துறைக்கு இணையதளம் (www.pedservices.py.gov.in) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

**மீன்வளம் மற்றும் மீனவர் நலம்**

**24**. குறைந்து வரும் நிலவள ஆதாரங்கள் மற்றும் மிகவிரைவாகப் பெருகிவரும் மக்கள்தொகை அடிப்படையில் நோக்குங்கால் மீன்வளம் அதிக முக்கியத்துவத்தைப் பெறுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். மீனவர் சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் இந்த அரசு முனைப்புடன் உள்ளது. புதுச்சேரி, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் பகுதிகளில் 61 நாட்கள் மீன்பிடித் தடைக்கால நிவாரணமாக 17,601 மீனவக் குடும்பங்களுக்குத் தலா ₹ 5,500 வீதம் ₹ 9.68 கோடி சென்ற ஆண்டு வழங்கப்பட்டுள்ளது. மேலும், கடந்த ஆண்டு மழைக்கால

நிவாரணமாக மீனவக் குடும்பம் ஒன்றிற்கு ₹ 2,500 வீதம் 15,983 மீனவக் குடும்பங்களுக்கு ₹ 4 கோடி வழங்கப்பட்டுள்ளது. 7,805 மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்த முதியோர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியமாக மொத்தம் ₹ 18 கோடி வழங்கப்பட்டது.

**25**. பதிவு பெற்ற மீன்பிடிப் படகுகளைப் பராமரிக்க ஆகும் செலவை ஏற்கும் விதமாக 431 இரும்பு / மரத்திலான விசைப்படகுகள் மற்றும் கண்ணாடி நுண்ணிழை படகுகளுக்கு முறையே ₹ 20,000 வீதம் மற்றும் ₹ 10,000 வீதம் என ₹ 64.10 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. பதிவுபெற்ற மீன்பிடி விசைப்படகு உரிமையாளர்கள் தங்களுடைய மீன்பிடிப் படகுகளைக் காப்பீடு செய்யும் பொருட்டு தாங்கள் செலுத்திய வருடாந்திரக் காப்பீட்டுச் சந்தாத் தொகையில் 75 விழுக்காடு மானியமாக ₹ 21.71 இலட்சம் 322 மீன்பிடி விசைப்படகு உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டது. இயந்திரம் பொருத்தாத படகுகள் வலையுடன் சேர்த்து வாங்குவதற்கு 50 விழுக்காடு மானியமாக 15 மீனவப் பயனாளிகளுக்கு மொத்தம் ₹ 2.78 இலட்சம் வழங்கப்பட்டது.

**26**. பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பில் படிக்கும் 161 சிறந்த மீனவச் சமுதாய மாணவர்களுக்கு ரொக்கப் பரிசாக ₹ 9.63 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மீனவச் சமுதாயத்தை சேர்ந்த 12 மாணவர்கள் விசாகப்பட்டினம் மற்றும் சென்னையில்

உள்ள மத்திய மீன்வள நிறுவனமான கடல் மற்றும் பொறியியல் பயிற்சி மையத்தில் பயிற்சி பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். பாரதப் பிரதமரின் "மத்ஸ்ய சம்பதா யோஜனா" திட்டத்தின்கீழ், புதுச்சேரி பகுதியை சார்ந்த 5,026 மீனவப் பயனாளிகளுக்கு பயனாளியின் பங்களிப்பாக ₹ 1,500 மற்றும் மத்திய அரசின் பங்களிப்பாக ₹ 3,000 சேர்த்து ₹ 4,500 நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. கிசான் கடன் அட்டையின் வாயிலாக 169 மீனவர்களுக்கு வங்கிகள் மூலம் கடனாக மொத்தம் ₹ 1.12 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**வனம் மற்றும் வனவிலங்கு**

**27**. புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் சுமார் 65,677 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மணப்பட்டு வனப்பகுதியில் பெருமளவில் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இலாசுப்பேட்டைப் பகுதியில் உள்ள வன நாற்றங்கால் இடம் பூங்கா பயன்பாட்டுக்காக உழவர்கரை நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக பல முழு உருவ மாதிரிகள் (life sized models) சமீபத்தில் கட்டப்பட்ட கருத்து விளக்க மையத்தில் கூடுதல் சிறப்பூட்டும் வகையில் நிறுவப்பட்டு உள்ளன.

## சுகாதாரம் மற்றும் குடும்ப நலம்

**28**. **“ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால் செல்லும்வாய் நோக்கிச் செயல்”** – அதாவது முடிந்த இடத்தில் எல்லாம் செயல்புரிவது நல்லது. செய்ய இயலாதபோது தக்க உபாயத்தை ஆராய்ந்து செய்தல் நல்லது என்ற அடிப்படையில் கோவிட்-19 பரவல் காரணமாக ஏற்பட்ட எதிர்பாராத சுகாதார நெருக்கடிகளை, முனைப்புடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் செயல்பட்ட முன்களப் பணியாளர்களைக் கொண்டு அரசு திறம்படக் கட்டுப்படுத்தியது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்த மகத்தான பங்களிப்பை அளித்த அனைத்து சுகாதாரத்துறைப் பணியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் இந்த வாய்ப்பின் மூலம் எனது பாராட்டுகளையும் நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன். முதல் அலையைப்போல் இல்லாமல் தற்போது கோவிட்-19ன் இரண்டாவது அலை பெரிய அளவில் உயிர்ச்சேதங்களை ஏற்படுத்திய போதிலும், இரண்டாவது அலையின் தீவிரம் பெரும் அளவில் குறைந்துள்ளது நமக்கு பெரும் நிம்மதியைத் தந்துள்ளது. இருப்பினும், இவ்வாட்சிப்பரப்பு மக்கள் கவனக்குறைவின்றியும் மற்றும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எவ்விதத் தளர்வுமின்றியும் தொடர்ந்து கடைபிடிக்கவேண்டும் என்று இந்த மேன்மைமிக்க அவையின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**29**. புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உள்ள அனைத்து 81 துணை மையங்களிலும் மருத்துவ அதிகாரிகளை நியமனம் செய்த வகையில் நாட்டில் புதுச்சேரி முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது என்பதை குறிப்பிடுவதில் நான் பெருமையடைகிறேன். 2020-21ஆம் நிதி ஆண்டில் 40 ஆரம்ப சுகாதார மையங்கள், மற்றும் 81 துணை மையங்களை சுகாதார நல வாழ்வு மையங்களாக அரசு மாற்றியுள்ளது. கணினியுடன் கூடிய வலை நிழலி (Web Camera) மற்றும் அச்சுப்பொறிகள் (Printers) அனைத்து சுகாதார நலவாழ்வு மையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து துணை செவிலியர்களுக்கும் Tablet PC மற்றும் அங்கீகாரம் பெற்ற சமூக சுகாதார ஆர்வலர்களுக்கு (ASHAs) திறன் பேசிகளும் (Smart Phones) வழங்கப்பட்டுள்ளன. சுகாதார நலவாழ்வு மையங்களுக்கு மருத்துவ / ஆய்வக உபகரணங்கள் வழங்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. சுகாதார நலவாழ்வு மையங்களில் யோகா மண்டபம், மூலிகைத் தோட்ட கட்டுமானம், தனிச்சின்னம் வடிவமைத்தல் (Logo Branding) போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் உட்பட கட்டடங்களை புதுப்பிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

**30**. பாரத பிரதமரின் “ஆயுஷ்மான் பாரத் ஜன் ஆரோக்ய யோஜனா” திட்டம் 31-12-2020 முதல் துவங்கப்பட்டு தற்போது இரண்டாம் ஆண்டிலும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் செலவை, மத்திய அரசு 60 விழுக்காடு,

மாநில அரசு 40 விழுக்காடு என்ற அளவில் ஏற்றுக்கொள்கிறது. நமது ஆட்சிப்பரப்பில் இத்திட்டத்தின்கீழ், 1,03,066 குடும்பங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. 13-01-2021 முதல் ஆயுஷ்மான் பாரத் திட்டத்துடன் மாநிலத் திட்டமான வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தையும் இணைத்ததன் காரணமாக ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ் கூடுதலாக 88,719 குடும்பங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

**31**. ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ், இந்திய தரநிர்ணயக் குழுவின் களஆய்வுக்குப் பின்னர் புதுச்சேரி ராஜீவ் காந்தி பெண்கள் மற்றும் குழந்தைகள் அரசு மருத்துவமனைக்கு வெண்கலத் தரநிர்ணய சான்றிதழும், மற்றும் உழவர்கரை நகராட்சியில் தூய்மையான மருத்துவமனைகள் என்ற பிரிவில் இந்த மருத்துவமனைக்கு சுகாதாரம் மற்றும் தூய்மையில் இரண்டாம் தரவரிசையும் வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களிடம் பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

**32**. புதுச்சேரி, இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பட்டமேற்படிப்பு நிறுவனத்திற்கு 100 mA போர்ட்டபிள் எக்ஸ்-ரே இயந்திரமும், போர்ட்டபிள் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் இயந்திரமும், ஈ.சி.ஜி. இயந்திரமும், முழு தானியங்கி உயிர் வேதியியல் பகுப்பாய்வு இயந்திரமும் மற்றும் அறுவை சிகிச்சை துறைக்கு, ₹ 15 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்ட இருமுனை

மற்றும் அல்ட்ரா சவுண்ட் எனர்ஜி ஜெனரேட்டரும் வாங்கப்பட்டு நோய் கண்டறியும் வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. காரைக்கால் அரசு பொது மருத்துவமனைக்கு அல்ட்ரா சவுண்ட் கலர் டாப்ளர் ₹ 15.75 இலட்சத்திற்கும் மற்றும் எலும்பியல் உள்வைப்புகளும் (Ortho Implants) வாங்கப்பட்டுள்ளன. ஒரு புதிய முயற்சியாக, தேசிய கண் பார்வையிழப்புத் தடுப்புக் குழுவும் (NPCB) மற்றும் அரவிந் கண் மருத்துவமனையும் இணைந்து இவ்வாட்சிப்பரப்பின் நான்கு பிராந்தியங்களில் உள்ள அனைத்து சுகாதார நலவாழ்வு மையங்களிலும் நீரிழிவு விழித்திரை நோய் பரிசோதனை முகாம்களை நடத்தி நீரிழிவு விழித்திரை பாதிப்புக்கான சிகிச்சைகளை இலவசமாக அளித்துள்ளன.

**33**. இவ்வாட்சிப்பரப்பில் உள்ள அனைத்து அரசு பிராந்திய மருத்துவமனைகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும் மற்றும் அரசு சாரா அமைப்பு (NGO) மருத்துவமனைகளிலும் கண்புரைக்கான இலவச அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நடமாடும் கண் மருத்துவ முகாம்கள் மூலம், இலவச IOL அறுவை சிகிச்சைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட அறுவை சிகிச்சைக்கான வசதிகள் உள்ள சுகாதார நலவாழ்வு மையங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த ஆண்டு, சுமார் 10,851 நபர்களுக்கு கண்புரைக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதில் 4,810 நபர்களுக்கு கண்புரை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு, பல்வேறு

பள்ளிகளில் பயிலும் 7,615 மாணவர்களுக்கு விரிவான கண்பார்வை பரிசோதனைகள் செய்யப்பட்டு அதில் ஒளிவிலகல் பார்வை குறைபாடு உள்ள 805 மாணவர்களில் 379 மாணவர்களுக்கு இலவச கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

**34**. புதுச்சேரியில் உள்ள இந்திரா காந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஒரு முழுமையான கோவிட் மருத்துவமனையாக மாற்றம் செய்யப்பட்டதை அடுத்து, அத்தியாவசியத் தேவைகளான திரவ ஆக்ஸிஜன் சேமிப்புத் திறனை அதிகரித்து கூடுதலாக 10 KL LMO கலன் நிறுவப்பட்டும் ஆக்ஸிஜன் படுக்கைகளின் எண்ணிக்கை 100-லிருந்து 235-ஆக உயர்த்தப்பட்டும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், கூடுதலாக 200 ஆக்ஸிஜன் படுக்கைகளை ஏற்படுத்தும் பணிகள் செயல்பாட்டில் உள்ளன.

## இந்து அறநிலையத் துறை

**35**. இந்து அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மற்றும் கட்டுப்பாட்டில் வராத 42 திருக்கோயில்களைச் சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ள ₹ 2.61 கோடி மானியக் கொடையாக வழங்கப்பட்டுள்ளது. நலிவுற்ற 198 திருக்கோயில்களுக்கு ₹ 20,000 வீதம் ஒரு கால பூஜை செய்விக்க ₹ 39.60 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. காரைக்காலில் 10 கோயில்கள் உட்பட மொத்தம் 20 கோயில்களுக்கு குடமுழுக்கு விழா வெகு

சிறப்பாக நடைபெற்றது. வக்ஃபு வாரியத்தில் பதிவு பெற்ற உலமாக்களுக்கு மாதாந்திர ஓய்வூதியமாக தலா ₹ 2,000 வீதம் 9 உலமாக்களுக்கும் மற்றும் காலஞ்சென்ற உலமாவின் மனைவி ஒருவருக்கு ₹ 1,000 என மொத்தம் ₹ 2.28 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. சுமார், 821 சிறுபான்மையின இஸ்லாமிய மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகையை வழங்கும் விதமாக ₹ 20.61 இலட்சம் புதுச்சேரி வக்ஃபு வாரியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

## தொழில்கள்

**36**. **“பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும் இருள்தீர எண்ணிச் செயல்”** – அதாவது ஒரு செயலைச் செய்யுமிடத்து பொருள், கருவி, காலம், செயல், இடம் ஆகியவற்றை ஆராய்ந்து செயல்பட வேண்டும் என்ற வகையில் பல்வேறு வர்த்தகங்களில் மேம்படுத்தப்பட்ட திறன் பயிற்சி திட்டங்களை உதவித்தொகையுடன் அரசு வழங்கி வருகிறது. 35 அட்டவணை இனத்தைச் சேர்ந்த இளைஞர்களையும் சேர்த்து மொத்தம் 164 இளைஞர்களுக்கு பல்வேறு வர்த்தகங்களில் உதவித்தொகையுடன் தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் ₹ 43.28 இலட்சம் மதிப்பீட்டு செலவில் புதிய குழுக்களாக 123 நபர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மத்திய மற்றும்

மாநில அரசுகளின் நலத்திட்டங்களை கிராமப்புற இளைஞர்கள் / பெண்களிடம் கொண்டு செல்லும் விதமாக புதுச்சேரி கிராமப்புறங்களில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன. இந்த முகாம்களில் தொழிலாளர் நலத்துறை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சமூக நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, வேளாண் துறை, மீனவர் நலத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் மத்திய அரசின் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறையின் (MSME) சென்னை மற்றும் புதுச்சேரி மையங்கள் கலந்துகொண்டன.

**37**. தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தின்கீழ், பெண்களுக்கு மேம்படுத்தப்பட்ட தையல் பயிற்சி அளிக்கப்பட்டதில் பொருளாதாரத்தில் பின்தங்கிய பெண்கள் பயனடைந்துள்ளனர். கைவினைத் தொழில்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 108 வேலையில்லாத கிராமப்புற மக்களுக்கு குறிப்பாக கிராமப்புற பெண்களுக்கு உதவித்தொகையுடன் கூடிய கைவினைப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. தென்னை நார் தொழில்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 15 அட்டவணை இனப் பயனாளிகளையும் சேர்த்து 63 நபர்களுக்கு ஊக்கத் தொகையுடன் கூடிய கயிறு திரித்தல் மற்றும் கயிறு மிதியடி தயாரித்தல் ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் ₹ 46.18 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**38**. வேலையில்லா இளைஞர்கள் சுயதொழில் தொடங்குவதை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ், பல்வேறு வங்கிகள் மூலம் 132 தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க ₹ 28 இலட்சம் மானியத்துடன் ₹ 78.78 இலட்சம் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி அவர்கள் சுயதொழிலைத் தொடங்கியுள்ளனர். பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டத்தின்கீழ் சுய தொழில் தொடங்கி தொழில் முனைவோர்களை உருவாக்கும் விதமாக 44 தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க ₹ 1.17 கோடி மானியத்துடன் ₹ 3.09 கோடி வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

## இந்திய மருத்துவமுறை மற்றும் ஓமியோபதி

**39**. **“உற்றான் அளவும் பிணியளவும் காலமும் கற்றான் கருதிச் செயல்”** – அதாவது மருத்துவர் நோயாளியின் நிலை, நோயின் அளவு, மருந்து கொடுக்கும் காலம் அறிந்து மருத்துவம் செய்ய வேண்டும் என்ற திருக்குறளுக்கு ஏற்ப, கோவிட்-19 பரவலின்போது கட்டுப்பாட்டு பகுதிகளில் வசிக்கும் மக்களின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் பொருட்டு நிலவேம்புக் குடிநீர் மற்றும் கபசுரக்குடிநீர் ஆகிய சித்தா மருந்துகள் வழங்கப்பட்டன. பொதுமக்களை நாடிச்சென்று மருந்துகளை வழங்குதல் மற்றும் சித்தா மற்றும் ஆயுர்வேத மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. காரைக்காலில் ஆயுஷ் சுகாதார மற்றும் நலவாழ்வு மையம் ஒன்று

நிறுவப்பட்டுள்ளது. தேசிய ஆயுஷ் திட்ட வழிகாட்டுதல்களின்படி துணை செவிலியர்கள் மற்றும் அங்கீகாரம் பெற்ற சமூக சுகாதார ஆர்வலர்களுக்கு சித்தா / ஆயுர்வேதம் குறித்த விழிப்புணர்வு பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. மண்ணாடிப்பட்டில் உள்ள சமூக சுகாதார நிலையத்திலும், திருபுவனை, அபிஷேகப்பாக்கம் மற்றும் அரியூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மூலிகைத் தோட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் கோவிட்-19 குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு ஆயுஷ் க்வத் (AYUSH KWATH) மருந்துகள் வழங்கப்பட்டன. வில்லியனூர், ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள ஆயுஷ் சுகாதார மற்றும் நலவாழ்வு மையத்தில் இந்திய மருத்துவமுறை மற்றும் ஓமியோபதி பிரிவு நிறுவப்பட்டுள்ளது. “ஆயுஷ்மான் பாரத்” திட்டத்தின்கீழ் புதுச்சேரி பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் இயங்கும் அனைத்து நலவாழ்வு மையங்களிலும் யோகா வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

## தகவல் தொழில்நுட்பம்

**40**. புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் தகவல் தொழில்நுட்பத் துறையை மேம்படுத்தும் விதமாக இந்திய அரசு இணையதளங்களின் வழிகாட்டுதல்களுக்கிணங்க துறைகளின் அதிகாரப்பூர்வ வலைத்தளங்களின் சீரமைப்பு மற்றும் மாற்றுத்திறனாளிகளும் எளிதாகப் பயன்படுத்தும் வகையில் மாற்றம்

செய்யப்பட்ட பணிகள் நிறைவு பெற்றுள்ளன. மொத்தமுள்ள 55 அரசுத் துறைகளில் இதுவரையில் 24 துறைகளின் வலைத்தளங்கள் (Website) சீரமைக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வந்துள்ளன. மீதமுள்ள 31 துறைகளுக்கு வலைதளங்களை விரைவாகத் தொடங்குவதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படும். வலைதள தகவல் மேலாளர்களுக்கு வலைதள உள்ளடக்கப் பணிகள் குறித்து தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. திறன் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், அரசு ஊழியர்களுக்கு அலுவலக ஆட்டோமேஷன் என்னும் மூன்று மாத பகுதிநேர பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

**உள்ளாட்சி**

**41**. சாலைகள், குடிநீர் வழங்கல், வீட்டுவசதி, சமூக மேம்பாடு போன்ற அதிக அளவிலான சேவைகளை உள்ளாட்சி அமைப்புகள் வழங்கி வருகின்றன. தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ், மத்திய அரசு "தூய்மைத் தரவரிசையை" அறிவித்துள்ளது. இதில் அகில இந்திய அளவில் புதுச்சேரி நகராட்சிக்கு 258-வது இடமும், மற்றும் உழவர்கரை நகராட்சிக்கு 171-வது இடமும் கிடைத்துள்ளன. மேலும், மண்டல வாரியான தரவரிசையில் காரைக்கால் நகராட்சிக்கு 35-வது இடமும், மாஹே நகராட்சிக்கு 77-வது இடமும், ஏனாம் நகராட்சிக்கு 58-வது இடமும் கிடைத்துள்ளன.

**42**. நகர்ப்புற ஏழைகளின் வாழ்வாதாரத்தை ஆதாயம் தரும் சுயதொழில் மற்றும் ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்புகள் மூலம் மேம்படுத்துவதற்காக இவ்வாட்சிப்பரப்பின் நகரப் பகுதிகள் முழுவதும் தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் (NULM) கொண்டுவரப்பட்டுள்ளன. இவ்வாட்சிப்பரப்பில் இத்திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசு 2020-21ஆம் ஆண்டிற்கு ₹ 4.19 கோடி வழங்கியுள்ளது. தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டத்தின் பல்வேறு கூறுகளின்கீழ் இவ்வாட்சிப்பரப்பிற்கு உட்பட்ட ஐந்து நகராட்சிகளில் பணிகளை மேற்கொள்வதற்காக ₹ 2.12 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**43**. தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் சுய உதவிக் குழுக்களை வலுப்படுத்துவதற்காக, 1,697 சுயஉதவிக் குழுக்களுக்கு ₹ 1.70 கோடியும் மற்றும் 82 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ₹ 41 இலட்சமும் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டத்தின் சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன வளர்ச்சித் திட்டத்தின்கீழ், நகர்ப்புற ஏழை குடும்பங்களுக்கு, சுயஉதவிக் குழுக்கள், பகுதி அளவிலான கூட்டமைப்பு மற்றும் நகர அளவிலான கூட்டமைப்பு என்னும் மூன்று அடுக்கு கட்டமைப்பில் நிதி உதவி வழங்கப்படுகிறது. வேலைக்கான திறன் பயிற்சி மற்றும் அதன்மூலம் வேலைவாய்ப்பை வழங்கும் திட்டத்தின்கீழ் 1,716 பயிற்சியற்ற நகர்ப்புற ஏழைகளுக்கு ₹ 2.57 கோடி செலவில் திறன் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

**44**. கடந்த ஆண்டு, 1,165 சுயஉதவிக் குழுக்கள், தனி நபர்கள் மற்றும் குழு நிறுவனங்களுக்கு வங்கிகள் மூலம் ₹ 18 கோடி கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 510 நபர்களுக்கு நிலையான வாழ்வாதாரத்திற்காக வணிக முயற்சிகளை மேற்கொள்ள பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2,886 தெருவோர வியாபாரிகள் கண்டறியப்பட்டு, 2,134 தெருவோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டையும், மற்றும் 2,166 தெருவோர வியாபாரிகளுக்கு விற்பனைச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. வீடற்ற நகரவாசிகளுக்குத் தங்குமிடம் வழங்கும் திட்டத்தின்கீழ் 719 வீடற்ற நகரவாசிகள் கண்டறியப்பட்டுள்ளனர். உழவர்கரை நகராட்சி மற்றும் காரைக்கால் நகராட்சிப் பகுதியில் தலா ஒரு தங்குமிடம் ஆக இரண்டு தங்குமிடங்கள் இயங்கிவருகின்றன. “அம்ருத்” திட்டத்தின்கீழ், இதுவரையில் ₹ 6 கோடி மதிப்பில் செய்து முடிக்கப்பட்ட 13 திட்டங்களில், 8 பூங்கா மேம்பாட்டு திட்டங்களும், 5 கழிவுநீர்த் திட்டங்களும் மற்றும் கழிவுநீர் அகற்றும் மேலாண்மை திட்டமும் அடங்கும்.

## தொழிலாளர் நலம்

**45**. இணக்கமான உறவு மற்றும் சிறந்த வேலை செய்யும் சூழல் ஆகியவற்றுடன் தொழில்வளர்ச்சியைப் பெருக்குதல், மற்றும் பல்திறன் பயிற்சிபெற்ற தொழிலாளர்களை உரிய பயிற்சிகள் மூலம் உருவாக்குதல் போன்ற தொழிலாளர் நலக் கொள்கைகளை இந்த

அரசு பின்பற்றி வருகிறது. இதையொட்டி, கோவிட்-19 பரவல் சூழல் இருந்தபோதிலும், புதுச்சேரியில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை விரிவுபடுத்தும் விதமாக 2020-ஆம் ஆண்டில் வலைதளம் மூலம் வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டதில் 734 நபர்கள் கலந்துகொண்டு அதில் 188 நபர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

**46**. தொழிற்சாலை ஆய்வகம் வழங்கும் சேவைகளான புதிய உரிமம் / வரைபடம், பதிவு / புதுப்பித்தல், கொதிகலன் உரிமம் / புதுப்பித்தல் மற்றும் அவ்வப்போது நடத்தப்படும் ஆய்வுகள் போன்றவை மட்டுமின்றி, தொழிற்சாலை சட்டம், 1984 மற்றும் இதர தொழிலாளர் சட்டம் மற்றும் விதிமுறைகள் தொடர்பான படிவங்கள் சமர்ப்பிப்பதற்கும், பதிவேற்றம் செய்வதற்கும் இணையதள வசதிகள் செய்யப்பட்டுள்ளன. புதிய கொதிகலன் நிறுவுவதற்கான பதிவும் மற்றும் கொதிகலன் சான்றிதழ் புதுப்பிக்கவும் இணையதளம் மூலம் ஒப்புதல் வழங்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**47**. புதுச்சேரி அமைப்பு சாரா தொழிலாளர் நலச்சங்கத்தில் இதுவரை 26,674 நபர்கள் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர். கடந்த ஆண்டு, மகப்பேறு நிதி உதவியாக ₹ 1.32 இலட்சமும், ஈமச்சடங்கு உதவியாக ₹ 7,000 வீதம் ₹ 9.80 இலட்சமும்

மற்றும் இறந்த உறுப்பினர்களின் குடும்பத்திற்கு உதவித் தொகையாக ₹ 22 இலட்சமும் தகுதியான உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**காவல்**

**48**. கோவிட்-19 பரவலின்போது விதிக்கப்பட்டிருந்த தடைக்காலங்களில் காவல் துறையினரின் பங்களிப்பு மிகவும் போற்றத்தக்கதாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். அவர்கள் இந்த மேன்மைமிக்க அவையின் பாராட்டுதலுக்கும் உரியவராவார்கள். புதுச்சேரியில் அமைதியான சூழலை உறுதிப்படுத்தும் விதமாக இந்த அரசு காவல் துறையின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதில் உரிய கவனம் செலுத்தி வருகிறது. முக்கிய இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், குற்றவாளிகள் / சமூக விரோதிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் விதமாக இன்னும் அதிக அளவிலான கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட உள்ளன. குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான கணினி இணையதளக் குற்றங்களைத் தடுத்து மேம்படுத்தும் விதமாக ₹ 69.72 இலட்சம் செலவில் இணையதளத் தடயவியல் உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன. காவல் நிலையங்களில் ₹ 1.14 கோடி செலவில் பெண்கள் உதவி மையம் மற்றும் பெண்களைத் தவறான செயல்களில் ஈடுபடுத்துதல் போன்ற குற்றங்களைத் தடுக்கும்

பிரிவுகள் நிறுவப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன. காவல் துறையை பலப்படுத்தும் விதமாக புதிய காவலர்களைத் தேர்வு செய்யும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

**துறைமுகம்**

**49**. புதுச்சேரி துறைமுகத்தை, மத்திய அரசு திட்டமான "சாகர் மாலா" திட்டத்தின்கீழ் மேம்படுத்துவதற்காக மத்திய அரசிடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதி மற்றும் கடற்கரை வரையறைப் பகுதிக்கான அனுமதி பெறப்பட்டு ₹ 33 கோடி செலவில் 7.30 இலட்சம் கனமீட்டர் மணலைத் தூர் வாருவதற்காக புதுச்சேரி துறைமுக முகத்துவாரம், மணற்பகுதி மற்றும் உள்கால்வாய் பகுதிகளில் மணலைத் தூர் வாருவதற்கான பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**50**. காரைக்கால் துறைமுகம் கடந்த நிதி ஆண்டில் 7.32 மில்லியன் டன் சரக்குகளைக் கையாண்டதன் மூலம் ₹ 7.70 கோடி வருவாயை ஈட்டியுள்ளது. மீனவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் விதமாக துறைமுக முகத்துவாரத்தில் 60,000 கனமீட்டர் மணல் தூர் வாரப்பட்டு பராமரிக்கப்பட்டுள்ளது. காரைக்காலில் துறைமுகத்துறையின்கீழ் இயங்கும் சுய பயன்பாட்டுக் கடல் முனைய வசதி, 6,725 டன் திரவ சரக்குகளைக் கையாண்டதன் மூலம் ₹ 8.30 இலட்சம் வருவாயை ஈட்டியுள்ளது.

## பொதுப்பணிகள்

**51**. பொருளாதார வளர்ச்சிக்கு உட்கட்டமைப்பு மேம்பாடு ஒரு முக்கிய காரணியாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வர். தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும் மற்றும் தற்போது இருக்கும் வசதிகளைப் பராமரித்தலிலும் அரசு கவனம் செலுத்தி வருகிறது. குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் திட்டத்தின்கீழ், 15 முக்கிய திட்டங்கள் பல்வேறு குடியிருப்பு பகுதிகளில் ₹ 72.04 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**52**. சங்கராபரணி ஆற்றின் குறுக்கே செட்டிப்பட்டு கிராமத்தில் ₹ 8.96 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை 3 மில்லியன் லிட்டர் வரை நீரை தேக்கிவைக்க உதவுவது மட்டுமின்றி செட்டிப்பட்டு மற்றும் மண்ணாடிப்பட்டு கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கு பெருமளவில் பயனளிக்கும். மேலும், இந்தத் தடுப்பணை மூலம் செட்டிப்பட்டு கிராமத்தில் உள்ள சுமார் 1,900 ஹெக்டர் விவசாய நிலமும் பயன்பெறும். திருக்காஞ்சியில் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே ₹ 29.21 கோடி செலவில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள பெரிய பாலம் திருக்காஞ்சி, ஒதியம்பட்டு, தவளக்குப்பம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராம மக்கள் பயன்பெறும் வகையில் பயண நேரத்தை கணிசமாகக் குறைத்துள்ளது. புதுச்சேரி, காரைக்கால், மற்றும் மாஹே பகுதிகளில் தற்போதுள்ள சாலைகளை மேம்படுத்தும் பணிகள் மொத்தம் ₹ 66.88 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**53**. வில்லியனூர் கொம்யூன், அன்பு நகரில் ₹ 60 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையமும், மற்றும் மாஹே பகுதியில் உள்ள அனைத்து பள்ளி கட்டடங்களை பழுதுபார்த்தல் / புதுப்பித்தல் / மேம்பாட்டு பணிகள் ₹ 50 இலட்சம் செலவிலும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. ஏனாமில், டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அறிவியல் மையக் கட்டுமானப் பணிகள் ₹ 4.75 கோடி செலவிலும் மற்றும் பி.கே. அரசு உயர்நிலைப் பள்ளியில் வகுப்பறைகளுக்கான கட்டுமானப் பணிகள் ₹ 1.54 கோடி செலவிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வருவாய்**

**54**. **“வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை ஆராய்வான் செய்க வினை”** – அதாவது பொருள் வருவாயை அதிகப்படுத்தி, அதனால் வளமையைப் பெருக்கி அவற்றிற்கு நேரும் இடையூறுகளை ஆராய்ந்து நீக்குவதே சிறந்தது என்ற வகையில் புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் குறிப்பாக கோவிட்-19 பரவல் காலங்களில், பேரிடர் மேலாண்மையில் வருவாய்த் துறையினரின் பங்களிப்பு மிகவும் பாராட்டுதலுக்குரியதாகும். 2020-21ஆம் ஆண்டில் புதுச்சேரி மாவட்ட பேரிடர் மீட்பு நிதியிலிருந்து (PDDRF) கோவிட்-19 தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள பல்வேறு துறைகள் / அலுவலகங்களுக்கு ₹ 12.06 கோடி வழங்கப்பட்டுள்ளது.

இதில் ₹ 7.39 கோடி சுகாதாரத் துறைக்கு, பரிசோதனைக் கருவிகள் வாங்குவதற்கும், கோவிட்-19 தடுப்பூசி தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கும், கோவிட்-19 பரவலை கட்டுப்படுத்துவதற்கும், இந்திரா காந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரி/மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட ஊழியர்கள் மற்றும் நோயாளிகளுக்கு உணவு வழங்குதல் போன்றவற்றிற்காகவும் வழங்கப்பட்டுள்ளது.

**55**. கோவிட்-19 தொடர்பான IVRS தொலைபேசி சேவை, பொதுப்பணித்துறையுடன் ஒருங்கிணைந்து தாலுக்கா அலுவலகம் மூலம் கோவிட்-19 கட்டுப்பாடு பகுதிகளில் தடுப்புகள் அமைத்தல், காவல் துறையினருக்கு ஒலிப்பெருக்கி சாதனங்கள் வாங்குதல், நகராட்சி மூலம் இரவு தங்கும் விடுதிகளை ஏற்பாடு செய்தல், தேசிய மாணவர் படை (NCC) / தேசிய சேவை திட்ட (NSS) தன்னார்வலர்கள் மூலம் கோவிட்-19 நோயாளிகளுடன் தொடர்பில் இருந்த நபர்களைக் கண்டறிதல், கண்காணித்தல் மற்றும் தனிமைப்படுத்துதல், அவசர காலங்களில் இயங்கும் மையங்களில் கோவிட்-19 கட்டுப்பாடு அறை அமைத்தல் போன்ற பல்வேறு கோவிட்-19 தொடர்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ராஜீவ் காந்தி சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 794 பயனாளிகளுக்கு நிதி உதவியாக ₹ 2.64 கோடி வழங்கப்பட்டது.

**56**. நிலங்கள் / மனைகளுக்கான உட்பிரிவு பட்டா மாற்றங்களில் (sub-division) ஏற்படும் காலதாமதத்தைக் களைவதில் அரசு முனைப்புடன் உள்ளது. இதன் முதல் கட்டமாக, சாரம் வருவாய் கிராமத்தில் உள்ள அசோக் நகர் பகுதியில் ஒரு முழுமையான நில அளவை மற்றும் நில உட்பிரிவுக்கான அளவைகள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரையில் 594 பயனாளிகளுக்கு தனிப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. புதுச்சேரியிலுள்ள அனைத்து தாலுக்கா அலுவலகங்களையும், நில அளவை இயக்ககத்துடன் வருவாய் ஆய்வாளர்கள் மட்டம் வரையில் இணைக்க கணினிகள், அச்சுப் பொறிகள் (Printers) மற்றும் தடையில்லா மின்சாரம் வழங்கும் கருவி (UPS) ஆகியவை ₹ 27 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன. இலவச நிலம் வழங்கல் சட்டத்தின்கீழ், நிலமற்ற தொழிலாளர்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா புதுச்சேரியில் 461 குடும்பங்களுக்கும், காரைக்காலில் 130 குடும்பங்களுக்கும், மாஹேயில் 11 குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

**ஊரக வளர்ச்சி**

**57**. வேலைவாய்ப்பினைக் குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு ஏற்படுத்தி வறுமையைப் போக்குவதற்காக உள்ள முக்கிய திட்டங்களில் ஒன்றாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்திரவாத திட்டம் திகழ்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இத்திட்டத்தின்கீழ் 10.58 இலட்சம் வேலை நாட்கள்

உருவாக்கப்பட்டு 47,854 கிராமப்புற குடும்பங்கள் பயனடைந்துள்ளனர். இதன்மூலம், ₹ 25.32 கோடி செலவில் 756 பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**58**. புதுச்சேரியைத் திறந்த வெளிக் கழிப்பிடங்கள் இல்லா நகரமாக்கும் பராமரிப்புப் பணிகளுக்காக (ODF Plus) தூய்மை இந்தியா திட்டம் கட்டம்-II தொடங்கப்பட்டு, இதற்காக மத்திய அரசிடமிருந்து வருடாந்திர செயல்பாட்டுத் திட்டத்திற்கு ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் 37,003 குடும்பங்கள் சுயஉதவிக் குழுக்களை உருவாக்கியுள்ளன மற்றும் 265 குடியிருப்போர் நலக் கூட்டமைப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன. 815 சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கப்பட்டுள்ளது. 96 பஞ்சாயத்து நிலைக் கூட்டமைப்புகளுக்கு சமூக முதலீட்டு நிதியாக ₹ 8.64 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**59**. ரூர்பன் (RURBAN) திட்டத்தின்கீழ், 6 பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் புதுச்சேரி பகுதியில் 3 பணிகளும் அதாவது கிருமாம்பாக்கம் ஏரித் திட்டம் ₹ 9 கோடிக்கும், பாகூரில் உள்ள கிராமங்களுக்கு தெரு விளக்குகள் அமைத்தல் ₹ 3 கோடிக்கும் மற்றும் பேருந்து பயணியர் நிழலகம் கட்டுதல் ₹ 2.15 கோடிக்கும் மற்றும் காரைக்கால் பகுதியில் 3 பணிகளும் அதாவது திருநள்ளாரில்

24 x 7 நேரமும் குடிநீர் வழங்கும் திட்டம் ₹ 6 கோடிக்கும், பொதுப் போக்குவரத்துத் திட்டம் ₹ 63 இலட்சத்திற்கும் மற்றும் வடிகாலுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல் ₹ 2 கோடிக்கும் உரிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

**60**. வறுமையைக் குறைக்கும் உத்தியின் ஒரு பகுதியாக, சாலை இணைப்பில்லா வாழ்விடங்களில் சாலை இணைப்பை ஏற்படுத்த மத்திய அரசால் பாரத பிரதமரின் கிராமப்புற சாலைத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. கிராமப்புற சாலைகளை மேம்படுத்துதல் மற்றும் புதிய சாலைகளை உருவாக்குதல், ஆகிய இரண்டையும் பாரத பிரதமரின் கிராமப்புற சாலைத் திட்டம்-IIன்கீழ் புதுச்சேரி ஆட்சிப்பரப்பு நிர்வாகம் மேற்கொண்டுள்ளது. புதுச்சேரி மற்றும் காரைக்கால் மாவட்டங்களில் 110 கிலோமீட்டர் நீளத்திற்கு சாலைகளை அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான நிதியை பெறுவதற்காக, மாவட்ட ஊரக மேம்பாட்டு அமைப்பு ₹ 48.80 கோடிக்கு மாவட்ட ஊரக சாலைத் திட்டத்தை தயார் செய்து மத்திய அரசின் ஒப்புதலை பெற்றுள்ளது.

**பள்ளிக்கல்வி**

**61**. **“கேடில் விழுச்செல்வம் கல்வியே”** – என்ற வகையில் கோவிட்-19 பரவலால் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் வழக்கமான வகுப்புகள் தடைபட்டிருந்தாலும், மாணவர்களின் கல்வி

பாதிப்புக்குள்ளாகாமல் இருக்க இணையவழி வகுப்புகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இலவசப் பாடப் புத்தகங்கள், நோட்டுகள் மற்றும் சீருடைகள் வழங்கல் திட்டத்தின்கீழ் 1,02,439 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். கோவிட்-19 பரவல் காரணமாக பள்ளிகள் மூடப்பட்டிருந்தாலும், மதிய உணவுத் திட்டத்தின்கீழ் 50,838 மாணவர்களுக்கு உணவு பாதுகாப்புப்படி வழங்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் பின்தங்கிய இதர வகுப்பு (OEBC) மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ் 16,192 மாணவர்களும் மற்றும் பல்வேறு கல்வி உதவித்தொகைத் திட்டங்களின்கீழ் 17,443 மாணவர்களும் பயனடைந்துள்ளனர்.

**62**. கடந்த ஆண்டு நடைபெற்ற தேசிய திறனாய்வுத் தேர்வில் மாநில அளவில் வெற்றி பெற்ற 20 மாணவர்களுக்கு ஒருமுறை ஊக்கத்தொகையாக ₹ 5,000 வழங்கப்பட்டது. மத்திய அரசு நடத்திய தேசியத் திறனாய்வு இரண்டாம் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற மூன்று மாணவர்களுக்கு ஒருமுறை ஊக்கத்தொகையாக தலா ₹ 10,000 மாணவர் தினவிழாவில் வழங்கப்பட்டது. ஏனாம் குரியம்பேட்டாவில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் அரசு உயர்நிலைப்பள்ளி 2020-21ஆம் கல்வியாண்டு முதல் பெருந்தலைவர் காமராஜர் இளையோர் கல்லூரியாக (Junior College) தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

## உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி

**63**. இளைஞர்களின் வாழ்க்கைப்போக்கை வடிவமைப்பதில் உயர்கல்வி மிக முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வர். இவ்வாட்சிப்பரப்பு தொடர்ந்து ஒரு கல்வி மையமாகவும் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து உயர் கல்வி கற்க அதிக மாணவர்களையும் ஈர்க்கிறது. சென்டாக் (CENTAC) மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதியான மாணவர்கள் நிதி உதவி பெற்று உயர்கல்வியினைத் தொடரும் விதமாக பெருந்தலைவர் காமராஜர் நிதி உதவித் திட்டத்தின்கீழ், நிதி உதவியாக ₹ 18.77 கோடி 2020-21ல் வழங்கப்பட்டுள்ளது. இந்தத்திட்டத்தின் மூலம், கடந்த ஆண்டு 438 மருத்துவக்கல்வி மாணவர்களும், 3,384 பொறியியல் கல்வி மாணவர்களும் மற்றும் 568 செவிலியர் கல்வி மாணவர்களும் பயனடைந்துள்ளனர்.

**64**. புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக்கழகச் சட்டம் இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் புதுச்சேரி அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. இது இவ்வாட்சிப்பரப்பில் முதல் மாநிலப் பல்கலைக்கழகமாகும். காரைக்காலில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் மற்றும் ஏனாம் பொறியியல் கல்லூரி ஆகியவை புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் அங்கம் வகிக்கும் கல்லூரிகளாக

இருக்கும். அனைத்து அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளும் இந்த தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின்கீழ் கொண்டுவரப்படும். (i) வேளாண் பொறியியல் (ii) பெட்ரோக்கெமிக்கல் பொறியியல் (iii) உயிர்மருத்துவப் பொறியியல் போன்ற பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளதால் பெருந்தலைவர் காமராஜர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் பல்துறைக் கல்வி நிறுவனமாக நிலைநிறுத்தப்படும். பெருந்தலைவர் காமராஜர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்திற்கு புதிய வளாகம் ஒன்றை நிறுவுவதற்காக காரைக்காலில் 25 ஏக்கர் பரப்பிலான நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

**65**. புதுச்சேரியில் உள்ள காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையத்தில் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு ₹ 5 கோடியை வழங்கியுள்ளது. இந்தக் கல்வியாண்டு முதல், புதுச்சேரி பொறியியல் கல்லூரியில் பி.டெக். (மெக்கட்ரானிக்ஸ்) என்னும் புதியப் பாடப்பிரிவை 60 மாணவர்கள் சேர்க்கையுடனும் மற்றும் சர்வதேச வணிக மற்றும் கண்டுபிடிப்பு முனைவோர் சுயதொழில் மேம்பாடு என்னும் முதுநிலை வணிக நிர்வாக (MBA) பாடப்பிரிவை 60 மாணவர்கள் சேர்க்கையுடனும் தொடங்க ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. பட்டயப்படிப்பு (Diploma), சான்றிதழ் (Certificate) மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்புடைய வேலைவாய்ப்பு சார்ந்த படிப்புக்கான பயிற்சியினை வழங்க தேசிய மின்னணு

மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் தனது மையத்தைப் புதுச்சேரியில் உள்ள மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியில் தொடங்க ஒப்புதல் அளித்துள்ளது என்பது ஒரு கூடுதல் நன்மையாகும்.

**66**. மாணவர்கள் தங்களது உயர் கல்வியைத் தொடர ஊக்கப்படுத்தும் வகையில் 2020-21ஆம் ஆண்டில் அரசு மற்றும் அரசு சார்ந்த கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், சட்டக் கல்லூரி, பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பக் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், சுமார் 10,000 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 2020-21ஆம் கல்வியாண்டிற்கான பிற இதரக் கட்டணங்களான நூலகக் கட்டணம், விளையாட்டு நாள் கட்டணம், பருவ இதழ் கட்டணம், கல்லூரி நாள் கட்டணம், ஆய்வகக் கட்டணம் மற்றும் இதுபோன்ற மற்ற கட்டணங்கள் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் அனைத்து மாணவர்களுக்கும் தள்ளுபடி செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்

**67**. மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் செய்த மதிப்பீட்டின்படி, மருத்துவமனைகளில் உயிர்மருத்துவக் கழிவுகளை முறையாக அகற்றுவதை உறுதி செய்ய பார் கோடிங் (Bar Coding) முறையைச் செயல்படுத்தியதில் நாட்டில் சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களில்

இவ்வாட்சிப்பரப்பு முதன்மை இடத்தைப் பிடித்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களிடம் பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் 100 விழுக்காடு நிதி உதவியோடு ₹ 1.10 கோடி செலவில் காட்சி அமைப்புடன் கூடிய நிகழ்நேரத் தொடர் காற்று தரக் கண்காணிப்பு நிலையம் ஒன்று புதுச்சேரி மாசுக் கட்டுப்பாட்டு குழுமத்தின் மூலம் நகர மற்றும் கிராமத் திட்டமிடல் துறையில் நிறுவப்பட்டுள்ளது.

**68**. தூய்மை செயல் திட்டத்தின்கீழ் (Swachhta Action Plan), அதிகளவில் பழமரக்கன்றுகள் அரசு பள்ளிகளுக்கு வழங்கப்பட்டன. மேலும், டாக்டர் அப்துல் கலாம் அறிவியல் மையம் மற்றும் கோளரங்கத்தின் பார்வையாளர்களுக்கு ஒருமுறையே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பைகளுக்கு மாற்றாக துணிப் பைகள் வழங்கப்பட்டன. கோவிட்-19 பாதிப்பிலிருந்து பாதுகாத்துக்கொள்ளப் பயன்படுத்தப்படும் 20 தானியங்கி சுத்திகரிப்பான்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்பட்டன. மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்தின் நிதி உதவியோடு, மாணவர்கள் மற்றும் வேலை தேடுபவர்களின் திறனை மேம்படுத்தி வேலைவாய்ப்பினை உருவாக்க, “மாசு கண்காணிப்புகள்: காற்று மற்றும் தண்ணீர் மாசுபாடு” என்ற பசுமைத் திறன் மேம்பாட்டுத் திட்டத்தை புதுடெல்லியில் இந்த ஆண்டு பிப்ரவரி மற்றும் மார்ச் மாதத்தில் புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டு குழுமம் நடத்தியது.

## சமூக நலம்

**69**. மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள் மற்றும் சமூகத்தில் நலிவடைந்த பிற வகுப்பினர் ஆகியோர்களின் நலனுக்காக பல்வேறு நலத் திட்டங்களை அரசு தொடர்ந்து இவ்வாட்சிப்பரப்பில் செயல்படுத்தி வருகிறது. இவ்வாட்சிப்பரப்பில் பல்வேறு நலத்திட்டங்களின்கீழ் 20,374 மாற்றுத்திறனாளிகள் பயனடைந்துள்ளனர். 20,374 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர நிதி உதவியாக ₹ 1,500 முதல் ₹ 3,300 வரை வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக, ஆண்டுக்கு ₹ 51.39 கோடி செலவு செய்யப்படுகிறது. மேலும், மற்ற பயன்களான மாற்றுத்திறனாளிகளுக்கான திருமண நிதி உதவி, கண்தான நிதி உதவி, ஈமச்சடங்கு நிதி உதவி, எரிபொருள் மானியம், போக்குவரத்துப்படி, இலவச அரிசி வழங்குதல், இலவசப் பேருந்து அனுமதி அட்டை, மெட்ரிக் வகுப்புக்கு முந்தைய மற்றும் பிந்தைய உதவித்தொகை, பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கான நிதி உதவி, தீபாவளியை முன்னிட்டு இலவசப் பொருட்களுக்கு ஈடான உதவித்தொகை, செவித்திறன் குறைபாடுள்ள மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கல்விச் செலவினங்களை திரும்பச் செலுத்துதல் போன்றவைகளும் வழங்கப்படுகின்றன.

**70**. பாண்கேர் (PONCARE) சங்கத்தைப் பராமரிப்பதற்கான நிதி உதவி, மற்றும் புதுச்சேரி மாநில சமூக நல வாரியத்திற்கான நிதி உதவி போன்ற நிதி உதவிகள் அரசால் வழங்கப்படுகின்றன. இதுவரையில், 13,487 பிரத்தியேக அடையாள அட்டைகள் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வண்டிகள் 104 மாற்றுத் திறனாளிகளுக்கு ₹ 55 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

**71**. மாற்றுத்திறனாளிகளின் உரிமைச் சட்டம், 2016 விதிகளின் அடிப்படையின்கீழ், மாற்றுத்திறனாளிகளுக்கான ‘சமவாய்ப்புக் கொள்கை’ வெளியிடப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆலோசனைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வுக்கான தேசிய திட்டத்தின்கீழ் புதுச்சேரி, இலாசுப்பேட்டையில் உள்ள மகளிர் தொழில்நுட்பக் கல்லூரியில் மாற்றுத்திறனாளிகளுக்குத் தடையில்லா சூழலை உருவாக்கும் விதமாக (Barrier-free environment) மத்திய அரசு ₹ 100.17 இலட்சம் வழங்கியுள்ளது அங்கு மறுசீரமைப்புப் பணிகள் முடிந்துள்ளன. பாரத பிரதமரின் “கரிப் கல்யாண் அன்ன யோஜனா” திட்டத்தின்கீழ் 80 விழுக்காடு ஊனமுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு நிவாரண நிதியாக ₹ 500 கடந்த ஆண்டு ஏப்ரல் மற்றும் செப்டம்பர் மாதங்களில் 1,259 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளை ஊக்கப்படுத்தும் விதமாக

இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் விளையாட்டு நாள் கொண்டாடப்பட்டது. இதில் சுமார் 700 மாற்றுத்திறனாளிகள் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

**போக்குவரத்து**

**72**. போக்குவரத்துத் துறையால் வழங்கப்பட்டு வரும் சேவைகளான சரக்கு போக்குவரத்து வாகனங்களுக்கான குறுகிய கால அனுமதிகள் வழங்குவது, போக்குவரத்து வாகனங்களுக்கான சாலை பயன்பாட்டு வரிகள் செலுத்துவது ஆகியவை கடந்த ஆண்டு கணினி இணையமயமாக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து, பொதுப்பணிகள், காவல், சுகாதாரம் மற்றும் கல்வித் துறையை சேர்ந்த அதிகாரிகளை உறுப்பினர்களாகக் கொண்டு நிரந்தர சாலைப் பாதுகாப்புப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவு 15 நாட்களுக்கு ஒருமுறை கூட்டங்களை நடத்தி சாலைப் பாதுகாப்பு சார்ந்த நடவடிக்கைகளை செயல்படுத்திடவும் மற்றும் சாலை விபத்துக்களை குறைப்பதற்கு உண்டான ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது. “சாலைப் பாதுகாப்பு - உயிர்ப் பாதுகாப்பு” என்ற கருத்தின் அடிப்படையில் 32-வது சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. கடந்த ஆண்டு ஒரு வாரம் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, இந்த ஆண்டு ஒருமாத காலம்

நடைபெற்றுள்ளது. 2020-21ஆம் ஆண்டில் கட்டணங்கள் / வரிகள் வாயிலாக போக்குவரத்துத் துறையின் மூலம் ₹ 80.25 கோடி பெறப்பட்டுள்ளது.

**சுற்றுலா**

**73**. உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு மட்டுமின்றி வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கும் மிகவும் விரும்பப்படுகிற சுற்றுலாத் தலமாக புதுச்சேரி திகழ்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். எனினும், கடந்த ஆண்டு கோவிட்-19 பரவல் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமாக குறைந்துள்ளது. புதுச்சேரிக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்கான பல முயற்சிகளை இந்த அரசு எடுத்து வருகிறது. வம்பாகீரப்பாளையம், வீராம்பட்டினம் மற்றும் புதுக்குப்பம் பகுதிகளில் மேம்பாடு செய்யப்பட்டுள்ள கடற்கரை சுற்றுலாத் திட்டங்களின் பராமரிப்பு மற்றும் இயக்கம் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. காரைக்கால் திருநள்ளாற்றில் மேம்படுத்தப்பட்ட தங்கும் விடுதி வசதிகள் புதுச்சேரி ஓட்டல் அசோக் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**நகர மற்றும் கிராமத் திட்டமிடல்**

**74**. பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு வீடுகட்டும் திட்டத்தின்கீழ் (கட்டம்-VI) புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் அவரவர் பகுதிகளில் வீடுகட்டுவதற்கு 2வது மற்றும் 3வது தவணையாக

417 பயனாளிகளுக்கு நிதி உதவியாக ₹ 3.16 கோடி வழங்கப்பட்டுள்ளது. பாரத பிரதமரின் வீடுகட்டும் திட்டத்தில் பயனாளிகளின் பங்களிப்புடன் கூடிய கட்டுமானப் பணிகளின்கீழ், ஒட்டுமொத்த தேவையான 13,700 வீடுகளில் 93 விழுக்காடு அளவிற்கு கட்டுமானத்திற்கு மத்திய அரசு முன்பே அனுமதி அளித்துள்ளது. ஒப்புதல் பெறப்பட்ட 12,706 வீடுகளில், இந்த ஆண்டு மார்ச் மாதம் வரை 3,224 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. வங்கிகளின் மூலம் செயல்படுத்தப்படும் கடனுடன் இணைக்கப்பட்ட மானியத் திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 1,950 வீடுகள் இவ்வாட்சிப்பரப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்

**75**. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினத்தைச் சேர்ந்த மக்களை சமூகத்துடன் ஒன்றிணைக்கும் விதமாக அவர்களின் நிலையான வளர்ச்சிக்கு அரசு பாடுபட்டு வருகிறது. மெட்ரிக் படிப்புக்கு முந்தைய கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், 3,898 சிறுபான்மையின மாணவர்களும் மற்றும் மெட்ரிக் படிப்புக்கு பிந்தைய கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் 593 சிறுபான்மையின மாணவர்களும் பயனடைந்துள்ளனர். இதற்காக, முறையே ₹ 98.84 இலட்சமும் மற்றும் ₹ 32.87 இலட்சமும் செலவு செய்யப்பட்டுள்ளது. இதேபோல், தொழில் சார்ந்த மற்றும் தொழில்நுட்பக் கல்வி அடிப்படையிலான

உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் 44 சிறுபான்மையின மாணவர்கள் பயனடைந்துள்ளனர். மேலும், புதுச்சேரியில் மூன்று மாணவ / மாணவியர் அரசு விடுதிகளும், காரைக்காலில் இரண்டு மாணவ / மாணவியர் விடுதிகளும், மற்றும் ஏனாமில் ஒரு மாணவ / மாணவியர் விடுதியும் மொத்தம் 85 மாணவ / மாணவியருடன் இயங்கி வருகின்றன. புதுடெல்லியில் உள்ள தேசிய பிற்படுத்தப்பட்ட மற்றும் நிதி மேம்பாட்டுக் கழகத்திடம் பெற்ற கடனின் ஒரு பகுதியை திருப்பிச் செலுத்துவதற்காக புதுச்சேரி பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மேம்பாட்டுக் கழகத்திற்குக் கடனாக ₹ 5 கோடியை அரசு சென்ற ஆண்டு வழங்கியுள்ளது.

## மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

**76**. **“தம்பொருள் என்பதம் மக்கள்”** – அதாவது தம் குழந்தைகளே ஒருவருக்கு செல்வம் என்ற குறளுக்கு ஏற்ப மகளிர் மற்றும் குழந்தைகளின் முன்னேற்றத்திற்கும் மற்றும் மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் வகையிலும், இந்த அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. கடந்த ஆண்டு ஏழைப் பெண்களின் திருமண உதவித் தொகையாக 222 பயனாளிகளுக்கு தலா ₹ 25,000 வழங்கப்பட்டுள்ளது. இதேபோல், விதவைகளின் மகள் திருமணத்திற்கு உதவித் தொகையாக 164 பயனாளிகளுக்கு

தலா ₹ 25,000 வழங்கப்பட்டுள்ளது. எட்டாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை படிக்கும் ஒரு பெண் குழந்தை மட்டும் உள்ள குடும்பத்தைச் சேர்ந்த 25 பெண் குழந்தைகளின் பெயரில் ₹ 25,000க்கு தேசிய சேமிப்பு பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு பெண் / இரண்டு பெண் குழந்தைகள் வைத்துள்ள குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்ட பெற்றோர்களுக்கு உதவித்தொகையாக ₹ 30,000 நிரந்தர வைப்பு நிதி 64 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. விதவைகளின் மறுமணத்திற்கு ஊக்கத் தொகையாக ₹ 50,000 வழங்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு மேற்கண்ட உதவித்தொகைகளை வழங்கியதற்காக, மொத்தம் ₹ 1.28 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

**77**. முதியோர் ஓய்வூதியத் திட்டம் அரசால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் முதியோர்கள், விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், திருமணமாகாத பெண்கள் மற்றும் திருநங்கைகள் என தற்போது 1,54,847 பயனாளிகள் மாதாந்திர உதவித்தொகை பெற்று வருகின்றனர். இதற்காக, 2020-21ஆம் ஆண்டில் ₹ 349.87 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இலவச வேட்டி சேலைக்கு ஈடாகக் குறைந்தபட்சம் இரண்டு குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட 1,21,899 குடும்ப உணவுப் பங்கீட்டு சிவப்பு அட்டைதாரர்களுக்கு ₹ 900 மற்றும் ஒரே ஒரு உறுப்பினர்

கொண்ட 13,399 குடும்ப உணவுப் பங்கீட்டு சிவப்பு அட்டைதாரர்களுக்கு ₹ 450-ம் அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்பட்டுள்ளது. இதற்காக, ₹ 11.57 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுச் சேவைகள் திட்டத்தின்கீழ், 25,939 குழந்தைகளும் மற்றும் 9,458 தாய்மார்களும் பயனடைந்துள்ளனர். இதற்காக ₹ 13.09 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

**78**. பிரதம மந்திரியின் மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவித்தொகை ₹ 5,000 கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு அவர்களது முதல் குழந்தைப் பேற்றுக்கு நேரடியாக அவர்களது வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ₹ 1.84 கோடி செலவு செய்யப்பட்டு 4,616 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் அரசு சாரா அமைப்புகள் மூலம் நடத்தப்படும் 23 குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களுக்கு மானியக் கொடையாக ₹ 3.40 கோடியும் மற்றும் சமூக நலத்துறையின்கீழ் இயங்கும் ஐந்து அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு ₹ 95.41 இலட்சமும் மேற்கண்ட காப்பகங்களில் தங்கி இருக்கும் குழந்தைகளின் பராமரிப்புச் செலவுக்காக வழங்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு கடினமான சூழ்நிலைகளில், உணவு, தங்குமிடம், உடை மற்றும் உரிய பாதுகாப்பினை

வழங்கும் நோக்கத்துடன் மத்திய அரசு திட்டமான “ஸ்வதார் கிரஹா திட்டம்” அரசு சாரா அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான செலவினங்களைத் திருப்பிச் செலுத்தும் விதமாக ₹ 21.18 இலட்சத்தை அரசு சாரா அமைப்புகளுக்கு அரசு வழங்கியுள்ளது.

## ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலம்

**79**. புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் அட்டவணை இன மற்றும் பழங்குடி இன மக்கள் சமூகப் பொருளாதார மற்றும் கல்வி நிலையில் மேம்பாடு அடைய இந்த அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. சமுதாயத்தில் நலிந்த சமூகத்தினருக்குக் கல்வியினை வழங்கி முன்னேற்றமடையச் செய்வதற்காக இவ்வாட்சிப்பரப்பில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தனியார் பள்ளிகளிலும் பயிலும் அட்டவணை இன மற்றும் பழங்குடி இன மாணவ மாணவியர்களுக்கு எவ்வித குடும்ப வருமானத்தையும் கணக்கில் கொள்ளாமல், முழுக் கல்விக் கட்டணத்தை வழங்கி உயர் / தொழில்முறைப் படிப்புகளை இவ்வாட்சிப்பரப்பில் உள்ள கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் தொடரும் விதமாக புதிய திட்டத்திற்கான அரசாணை இந்த ஆண்டு ஜனவரி மாதம் வெளியிடப்பட்டுள்ளது. 2020-21ஆம் ஆண்டில் அட்டவணை

இனத்தைச் சேர்ந்த 20,571 மாணவர்களின் கல்வி, பயிற்சி மற்றும் சுயவேலை வாய்ப்புக்காக ₹ 19.60 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

**80**. பாரத பிரதமரின் வீடுகட்டும் மானியத் திட்டத்தின்கீழ், 1,184 அட்டவணை இனப் பயனாளிகளுக்கு ₹ 10.90 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதேபோல், மாநில அரசின் பாரத ரத்னா ராஜீவ் காந்தி கல்வீடு கட்டும் மானியத் திட்டத்தின்கீழ் நல்ல வடிவமைக்கப்பட்ட கல்வீடு கட்ட 194 அட்டவணை இனப் பயனாளிகளுக்கு ₹ 2.31 கோடி வழங்கப்பட்டுள்ளது. 655 அட்டவணை இனக் குடும்பங்களைச் சேர்ந்த ஏழைப் பெண்களின் திருமண நிதி உதவிக்கு ₹ 75,000 வழங்கப்பட்டு, ₹ 4.92 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

**81**. குழந்தைகளின் இறப்பு விகிதத்தைக் குறைக்கும் விதமாக கருவுற்ற மற்றும் பாலூட்டும் அட்டவணை இனத் தாய்மார்களுக்கு நிதி உதவியாக பயனாளி ஒருவருக்கு ₹ 18,000 (மகப்பேறு காலத்திற்கு முன் ₹ 9,000 மற்றும் மகப்பேறு காலத்திற்கு பின் ₹ 9,000) வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 1,249 அட்டவணை இனப் பெண்கள் பயனடைந்துள்ளனர். தொடர் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ள அட்டவணை இனக்

குடும்பங்களுக்கு உதவும் வகையில், மாதந்தோறும் நிதி உதவியாக ₹ 3,000 வழங்கப்பட்டுள்ளது. இதற்காக, கடந்த ஆண்டு ₹ 7.09 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. கலப்புத் திருமணத் தம்பதியர்களுக்கு ஊக்கத்தொகையாக ₹ 2.50 இலட்சம் வழங்கப்பட்டு இதன்மூலம், 135 திருமணத் தம்பதியர்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக, ₹ 3.37 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. 2020-21ஆம் ஆண்டில், 1,197 குடும்பங்களுக்கு, இறந்தவர்களின் இறுதிச் சடங்கினை மேற்கொள்ள தலா ₹ 15,000 நிதி உதவி வழங்கப்பட்டு இதற்காக ₹ 1.80 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

**82**. இவ்வாட்சிப்பரப்பில், திறந்தவெளிக் கழிப்பிடங்களை முற்றிலுமாக நீக்கும் விதமாக அட்டவணை இனக் குடும்பங்களுக்கு கழிப்பறைகள் கட்டுவதற்காக ₹ 20,000 வழங்கப்பட்டுள்ளது. அட்டவணை இன / பழங்குடியினர் வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளில் குடிமை வசதிப் பணிகளை மேற்கொள்ள பாட்கோ மற்றும் ஏனாம் நகராட்சிக்கு மானியக் கொடையாக ₹ 12.66 கோடி வழங்கப்பட்டுள்ளது. அட்டவணை இன / பழங்குடியின வன்கொடுமை தடுப்புச் சட்டம், 1989ன்கீழ் பாதிக்கப்பட்ட 31 நபர்களுக்கு நிவாரண நிதியாக ₹ 69.22 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாட்சிப்பரப்பில் சிவப்பு / மஞ்சள் குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டை வைத்துள்ள 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து அட்டவணை இன மற்றும்

பழங்குடியின மக்களுக்கு இலவச வேட்டி சேலைக்குப் பதிலாக பணமாக தலா ₹ 500 வீதம் தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளுக்கு நேரடிப் பணப் பரிவர்த்தனை மூலம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 2020ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகைக்காக 1,23,583 பயனாளிகளுக்கு ₹ 6.18 கோடியும் மற்றும் 2021 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்காக 1,24,172 பயனாளிகளுக்கு ₹ 6.21 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

**83**. நிறைவாக, இவ்வாட்சிப்பரப்பு மக்கள் மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் இந்த அரசைத் தேர்ந்தெடுத்துள்ளனர் என்று நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். மேலும், இந்த மேன்மைமிக்க அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திறமையான வழிகாட்டுதலின்படி, மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற கடுமையாகப் பாடுபடுவீர்கள் என்றும், மற்றும் எதிர் வரும் காலங்களில், வறுமை மற்றும் வேலையின்மை இல்லாத வளமைமிக்க பிரதேசமாக இவ்வாட்சிப்பரப்பினை உருவாக்குவீர்கள் என்றும் நான் நம்புகிறேன். இந்த அரசு, கோவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. அதில் பெருமளவில் வெற்றியும் கண்டுள்ளது. இவ்வாட்சிப்பரப்பு மக்கள் மற்றும் அரசு இயந்திரத்தின் ஒத்துழைப்புடன்

இவ்வாட்சிப்பரப்பு விரைவில் கோவிட்-19 பரவலிலிருந்து விடுபடும் என்று நான் நம்புகிறேன். “**பிணியின்மை, செல்வம் விளைவின்பம் ஏமம் அணியென்ப நாட்டிற்கிவ்வைந்து**” – அதாவது நோயின்மை, செல்வம், விளைவு, மகிழ்ச்சி, காவல் என்ற ஐந்தினையும் பெறுவது மாநிலத்திற்கு அழகு என்ற வகையில் இந்த சீரிய முயற்சியில் இவ்வாட்சிப்பரப்பு புதிய உச்சத்தை அடைய உங்களின் ஒத்துழைப்பை வேண்டி நான் இந்த உரையை முடிக்கிறேன்.

**ஜெய்ஹிந்த்....**

**வாழ்க பாரதம் !**

**வளர்க புதுச்சேரி !!**

**கொரோனாவிலிருந்து உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள்**




தடுப்பூசி போட்டுக்கொள்ளுங்கள்

அச்சிட்டோர் : அரசினர் மத்திய அச்சகம், புதுச்சேரி - 605 009.